சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–31.12.2020

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் மார்கழி மாதம் 16–ஆம் நாள் (டிசம்பர் திங்கள் 31–ஆம் நாள்:–31.12.2020) வியாழன் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**<u>2020–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31.12.2020ம் நாள் வியாழன் கிழமையன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான எண் 164–இன் உண்மை நகல்</u>**

சின்னமனூர் நகராட்சியின் குடிநீர்ப் பிரிவு செலவு வரவினை காட்டிலும் கூடுதலாக உள்ளதால், குடிநீர் விநியோகம் பராமரிப்பு செலவு, பணியாளர்கள் ஊதியம், குடிநீர் விநியோகப் பணிக்கு பெறப்பட்ட கடனுக்கு தவணை செலுத்துதல் மற்றும் மின் கட்டணம் செலுத்துவதற்கு பற்றாக்குறையாக உள்ளதை ஓரளவு நிவர்த்தி செய்யும் பொருட்டு, தற்சமயம் நகராட்சியில் நடைமுறையில் உள்ள குடிநீர் மாதாந்திர கட்டணத்தினை கீழ்க்கண்டவாறு உயர்வு செய்ய இந்நகர்மன்றத்தின் 28.06.2019–ஆம் நாளிட்ட 638–ஆம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

| வரிசை எண் | தற்போது உள்ள கட்டணம் / வைப்புத் தொகை | | உயர்த்தப்படவுள்ள கட்டணம் / வைப்புத் தொகை | |
|---|---|---|---|---|
| 1. | வீட்டுப் பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.60/<br>ரூ.4000/– | 10000 லிட்டர் வரை ரூ.120/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.12/– | ரூ.4000/– |
| 2. | வணிகப் பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.80/–<br>ரூ.8000/– | 10000 லிட்டர் வரை ரூ.150/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.30/– | ரூ.8000/– |
| 3. | தொழிற்சாலை பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.150/–<br>ரூ.15000/– | 10000 லிட்டர் வரை ரூ.300/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.50/– | ரூ.15000/– |
| 4. | தண்ணீர் வரி (Water Cess) மூன்று மாதத்திற்கு கட்டணம் ரூ.5/– வீதம் வசூல் செய்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்காக. | | | |
| 5. | நிர்ணயிக்கப்பட்ட குடிநீர்க் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில் அதாவது காலாண்டு முடிவு பெற்ற அடுத்த மாதத்தின் 20–ஆம் தேதிக்குள் செலுத்தாத இணைப்பிற்கு தவணை ஒன்றுக்கு ரூ.50/– அபராத கட்டணமாக வசூல் செய்யப்படும். | | | |

மேற்கண்ட விவரப்படி குடிநீர்க் கட்டணங்களை திருத்தியமைப்பதற்கு குடிநீர் விநியோக உபவிதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள (Necessary Amendments in Water Supply Bye-Laws) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்களின் 04.11.2020ம் நாளிட்ட ந.க.12404/2017/கு.வ.2 எண் செயல்முறைகளில் திருத்திய பொது அங்கீகாரம் (Revised General Approval) கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்</u>

1. நகராட்சி ஆணையாளர், சின்னமனூர் நகராட்சி அவர்கள் இப்பொருள் தொடர்பாக குடிநீர் விநியோக உபவிதிகளில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உரிய திருத்தம் மேற்கொண்டு விதிகளுகளுக்குட்பட்டு மேற்கண்ட குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.
2. சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற தீர்மானத்தின்படியும் ஒவ்வொரு 5 ஆண்டிற்கும் 5%க்கும் குறையாமல் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தி வசூலிக்கப்படவேண்டும். மேலும், புதிய குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் ஏற்கனவே அமுலில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கும் பொருந்தும் என்ற விவரத்தினை உபவிதிகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.
3. உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் அதே வைப்புத் தொகை விவரங்களை நாளிதழில் (தமிழ் / ஆங்கிலம்) வெளியீட்டு பொது மக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும்.
4. திருத்தம் செய்யப்பட்ட குடிநீர் விநியோக உபவிதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ் / ஆங்கிலம்) பிரசுரம் செய்து அதன் நகல்கள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
5. தேவையான நகர்மன்றத் தீர்மானம் மற்றும் துணை விதிகள் நகல்கள் போன்றவற்றுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முறைப்படி விண்ணப்பித்து இறுதி அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
6. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.748/2008/குவ2, நாள்.21.09.2009–இல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்.
7. குடிநீர் விநியோக திட்டத்திற்கான உரிய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டுமெனவும் அனுமதியற்ற வீட்டுக் குழாய் இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பாக அரசாணையை பின்பற்றும் படியும் அறிவுறுத்தப்படுகிறது.
8. திருத்திய பொது அங்கீகாரம் பெற்ற பின் அதை நகர்மன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி நாளிதழில் பிரசுரம் ஆகும் முன் அத்தீர்மான நகலை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, சின்னமனூர் நகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டண விகிதங்களை மாற்றியமைத்து உபவிதிகளில் திருத்தம் மேற்கொண்டுள்ளதை நடைமுறைப்படுத்தவும், அதனடிப்படையில் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்கள் திருத்திய பொது அங்கீகாரம் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. குடிநீர் விநியோக உபவிதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்வதற்கும், அதனடிப்படையில் திருத்தம் செய்ய உபவிதிகளுக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்கள் திருத்திய பொது அங்கீகாரம் (Revised General Approval) வழங்கியுள்ளதை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி உபவிதிகளை மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்தை ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண், நாள்** **164, நாள்.31.12.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) சி.ந.சியாமளா
தனி அதிகாரி (ம) ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான (குடிநீர் லாரி) வாகனம் வண்டி எண்.TN603761க்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு, மேற்படி வாகனத்திற்கு வேக கட்டுப்பாட்டு கருவி கட்டணம் தொகை ரூ.4000/—ம், பசுமை வரி கட்டணம் தொகை ரூ.1515/—ம், புகைச்சான்று கட்டணம் தொகை ரூ.300/—ம் மற்றும் மஞ்சள் சிவப்பு ஸ்டிக்கர் கட்டணம் தொகை ரூ.750/—ம் ஆக மொத்தம் தொகை ரூ.6565/—ஐ வாகன ஓட்டுநரால் செலவு செய்யப்பட்டதை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **அனுமதிக்கலாம். (ந.க.எண்.0324/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **165, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான (Desilting Auto) வாகனம் வண்டி எண்.TN60Q4981க்கு தகுதி சான்று பெரும் பொருட்டு, மேற்படி வாகனம் புதுப்பித்தல் கட்டணம் தொகை ரூ.650/—ம், புகைச்சான்று கட்டணம் தொகை ரூ.200/—ம், ஆக மொத்தம் தொகை ரூ.850/ஐ செலவு செய்ததை வாகன ஓட்டுனருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **அனுமதிக்கலாம். (ந.க.எண்.3245/2017/இ2)**

**தீர்மான எண், நாள்** **166, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting Auto வண்டி வாகனம் எண்.TN60Q4963க்கு மின் கலப்பெட்டி பழுதடைந்துவிட்டதால், புதிய மின்கலப் பெட்டி (X-Side Battery) வாங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5500/—க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1. அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3462/2017/இ2)**

**தீர்மான எண், நாள்** **167, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான (Desitling Auto) வாகனம் வண்டி எண்.TN60Q4963க்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு, மேற்படி வாகனம் புதுப்பித்தல் கட்டணம் தொகை ரூ.650/—ம், புகைச்சான்று கட்டணம் தொகை ரூ.200/—ம் மற்றும் மஞ்சள் ஸ்டிக்கர் கட்டணம் தொகை ரூ.140/— ஆக மொத்தம் தொகை ரூ.990/—ஐ இந்நகராட்சியின் ஓட்டுநர் திரு.எம்.சந்தனமகாராஜன் அவர்களால் மேற்படி தொகையினை வழங்கியதால், இச்செலவு தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **அனுமதிக்கலாம். (ந.க.எண்.3462/2017/இ2)**

**தீர்மான எண், நாள்** **168, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணிக்கான உபவிதிகள் தயார் செய்யப்பட்டு மேற்படி உபவிதிகளுக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்களின் 01.09.2020 மற்றும் 04.11.2020–ஆம் தேதிகளிட்ட ந.க.12404/2017/குவ2 எண்ணிட்ட செயல்முறைகளில் முறையே பொது அங்கீகாரம் மற்றும் திருத்திய பொது அங்கீகாரம் (General Approval and Revised General Approval) பெறப்பட்டுள்ளன. குடிநீர் விநியோகப் பணிக்கு டேவணித் தொகை திருத்தியமைக்கப்பட்ட மாதாந்திர கட்டணம் செலுத்துவது குறித்து பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க வேண்டி முறையே தினபூமி நாளிதழில் 22.08.2020 அன்றும் Trinity Mirror என்ற ஆங்கில நாளிதழில் 23.08.2020 அன்றும் விளம்பரம் வெளியிடப்பட்டதில், பொது மக்களிடமிருந்து ஆலோசனையோ மற்றும் ஆட்சேபனையோ வரப்பெறவில்லை.

எனவே சின்னமனூர் நகராட்சியில் குடிநீர் விநியோகப் பணிக்கான உபவிதிகளை அமுல்படுத்தும் பணிக்கு இறுதி ஒப்புதல் (Final approval) பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. அனுமதிக்கலாம்.**

**2. மாவட்ட அரசிதழில் வெளியிட்ட பின்னர் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் இறுதி ஒப்புதல் பெறத் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **169, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting வாகன எண்.TN60Q4981க்கு வருடாந்திர காப்பீடு 17.12.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (18.12.2020 முதல் 17.12.2021 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு, தொகை ரூபாய்.9678/–ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.**

**3. அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3245/2017/இ2)**

**தீர்மான எண், நாள்** **170, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desiting வாகன எண்.TN60Q4963க்கு வருடாந்திர காப்பீ 17.12.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (18.12.2020 முதல் 17.12.2021 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு, தொகை ரூபாய்.9742/—ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.**<br>**3. அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3462/2017/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **171, நாள்.31.12.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான அடிப்படை உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.12000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **172, நாள்.31.12.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தையின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுழைவு வாயிலை ஒட்டி நகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் எண்ணத்திலும் மேற்படி இடங்களில் தனி நபர்கள் யாரும் ஆக்கிரமிப்பு செய்வதை தடுக்கும் நோக்கத்திலும் முறையே 7 மற்றும் 2 கடைகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, மேற்படி இடத்தில் உள்ள மண்ணை பரிசோதனை மேற்கொள்ளவும், கட்டிட வடிவமைப்பு தயார் செய்து வழங்கவும் (Soil Test and Structural Design) வழஙகக் கோரி, போடிநாயக்கனூர் அரசினர் பொறியியல் கல்லூரிக்கு 28.12.2020—இல் கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி கல்லூரி முதல்வர் அவர்களின் 29.12.2020ம் நாளிட்ட கடித எண்.GCE/PCE/Soil/2020/104C —இல் மேற்படி பணிக்கு மண் பரிசோதனை கட்டணமாக ரூ.18000/—ம், சரக்கு மற்றும் சேவை வரி 18% ஆக ரூ.3240/— ஆக மொத்தம் ரூ.21240/—ஐ மற்றும் கட்டிட வடிவமைப்பு கட்டணம் ரூ.20600/—, சரக்கு மற்றும் சேவை வரி 18% ஆக ரூ.3708/— ஆக மொத்தம் ரூ.24308/—ஐ கேட்பு காசோலையாக "**The Principal, Govt College of Engineering, Bodinayakanur**" என்ற முகவரிக்கு எடுத்து கலந்தறி கட்டணமாக (Fee for Consultancy) செலுத்தவும், உடன் 5 நிபந்தனைகள் தெரிவித்து அதற்கு இசைவளிக்க (Offered) வேண்டப்பட்டுள்ளது. அதன்படி தொகை ரூ.45548/—ஐ மேற்படி அரசு பொறியியல் கல்லூரிக்கு செலுத்தவும், நிபந்தனைகளுக்கு இசைவளிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1.நகராட்சியின் வருவாயினை ஓரளவு உயர்த்தும் பொருட்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும். |
| தீர்மான எண், நாள் | 173, நாள்.31.12.2020 |
| தீர்மானம் | |

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–21ம் ஆண்டிற்கான கம்பம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.13.80 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 09.11.2020ம் நாளிட்ட ந.க.1515/2020/தி6 எண் செயல்முறைகளில் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. (அரசாணை (பல்வகை) எண்.130, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (எஸ்.ஜி.எஸ்1) துறை, நாள்.27.07.2020) அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.12.2020ம் அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் பெயர் : சின்னமனூர் நகராட்சியில் வேளாண்மை விளை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (விற்பனைக்குழு) கட்டிட வளாகத்தில் பொது விநியோக கடை கட்டுதல் சின்னமனூர் கிளை, சின்னமனூர் நகர்ப்பகுதி நியாய விலைக்கடை எண்.2**

**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்**

1. திரு.K.வனராஜ், கூடலூர் – 4.56 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 4.91 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதில், கூடலூர் திரு.கே.வனராஜ் என்பவரின் 4.56% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரரிடம் பேரப்பேச்சு அடிப்படையில் கடிதம் வழங்கக்கோரி, (Negotiation Letter) 11.12.2020–இல் கோரியதில், ஒப்பந்தக்காரர் திரு.கே.வனராஜ் என்பவர் கட்டிடப் பணிகளுக்கான மூலதன உபகரணங்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீடு விலையை விட 4.56% கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை குறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளதால், 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இல் முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் அல்லது விதியின்படி 5%-க்கு குறைவாக உள்ளதால் ஒப்புதல் செய்யலாம். (ந.க.எண்.2294/2020/இ1). |
| தீர்மான எண், நாள் | 174, நாள்.31.12.2020 |
| தீர்மானம் | |

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–21ம் ஆண்டிற்கான கம்பம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.13.80 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 09.11.2020ம் நாளிட்ட ந.க.1515/2020/தி6 எண் செயல்முறைகளில் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. (அரசாணை (பல்வகை) எண்.130, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (எஸ்.ஜி.எஸ்1) துறை, நாள்.27.07.2020) அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.12.2020ம் அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் பெயர் : சின்னமனூர் நகராட்சியில் வேளாண்மை விளை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (விற்பனைக்குழு) கட்டிட வளாகத்தில் பொது விநியோக கடை கட்டுதல் சின்னமனூர் கிளை, சின்னமனூர் நகர்ப்பகுதி நியாய விலைக்கடை எண்.5**

**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்**

1. திரு.K.வனராஜ், கூடலூர் – 4.56 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 4.91 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதில், கூடலூர் திரு.கே.வனராஜ் என்பவரின் 4.56% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரரிடம் பேரப்பேச்சு அடிப்படையில் கடிதம் வழங்கக்கோரி, (Negotiation Letter) 11.12.2020–இல் கோரியதில், ஒப்பந்தக்காரர் திரு.கே.வனராஜ் என்பவர் கட்டிடப் பணிகளுக்கான மூலதன உபகரணங்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீடு விலையை விட 4.56% கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை குறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளதால், 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இல் முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் அல்லது விதியின்படி 5%-க்கு குறைவாக உள்ளதால் ஒப்புதல் செய்யலாம். (ந.க.எண்.2294/2020/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **175, நாள்.31.12.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.21085/பி3/2016, நாள்.31.08.2016–இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1–இன்படி, 01.08.2019 முதல் 31.12.2020 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் கொரோனா தொடர்பான பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.121, நாள்.29.10.2020–இன்படி அக்டோபர் 2020 முதல் டிசம்பர் 2020 வரை ந.க.எண்.0576/2015/எச்1, நாள்.30.09.2020–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 31.12.2020 உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (Covid-19) தொற்று பரவல் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், அண்டை மாவட்டமான இம்மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயம் இருப்பதாலும், மாநில அரசு முழு ஊரடங்கு அமுல்படுத்தியுள்ளதால் பொது மக்கள் நலன் கருதியும், தொற்று பரவும் அபாயத்தை தடுக்கும் பொருட்டும், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று (01.01.2021 முதல் 31.03.2021 வரை) உள்ள மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம். அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0576/2020/எச்1)

**தீர்மான எண், நாள்** **176, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட இடங்களில் முடிதிருத்தல் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V-இல் உள்ள உட்பிரிவு (ii) மற்றும் III-இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920ம் ஆண்டு (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249–இன்பிடி சின்னமனூர் நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை சின்னமனூர் நகராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்று உரிமம் பெற்றுக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அலுவலக ந.க.எண்.19775/ஜே2/2019–3, நாள்.15.12.2020ம் தேதிய செயல்முறை உத்திரவில் அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி உரிமம் பெற்றுக் கொள்ள அறிவிப்பினை தினசரி நாளிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஒன்றில் சிறிய அளவில் விளம்பரம் மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட விளம்பரம் தனி அதிகாரி மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2695/2017/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **177, நாள்.31.12.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை வளாகத்தின் வடக்கு பக்கம் அமைந்துள்ள நுழைவு வாசலின் வட பகுதியில் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யாதிருக்கவும், மேற்படி சந்தையின் வலது பக்க நுழைவு வாயிலின் வலப்புறம் நகராட்சி இடத்தில் 7 எண்ணம் கடைகள் கட்டி நகராட்சியின் வருவாயை ஓரளவு பெருக்கவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.34.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி கடைகள் கட்டும் பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4461/2020/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **178, நாள்.31.12.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் தென்புறம் உள்ள கேட்டின் இடது புறம் தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அடிக்கடி மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றியவுடன் மீண்டும் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை தடுத்து, நகராட்சிக்கு வருமானம் ஈட்டும் நோக்கில் மேற்படி இடத்தில் வணிக கட்டிடம் ஒன்று கட்டவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.6.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி கடை கட்டும் பணிக்கு ஆகும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்யலாம். (ந.க.எண்.4460/2020/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **179, நாள்.31.12.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.17**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் தென்புறம் உள்ள கேட்டின் வலது புறம் தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அடிக்கடி மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றியவுடன் மீண்டும் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை தடுத்து, நகராட்சிக்கு வருமானம் ஈட்டும் நோக்கில் மேற்படி இடத்தில் வணிக கட்டிடம் ஒன்று கட்டவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.6.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1.அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி கடை கட்டும் பணிக்கு ஆகும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்யலாம். (ந.க.எண்.4459/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **180, நாள்.31.12.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், துப்புரவு பணியாளர்கள் மற்றும் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் (Out Sourcing Sanitary Workers Engaged from Contractors) மூலம் அனைத்து குடியிருப்புகளுக்கும் சென்று திடக்கழிவுகளைப் பிரித்து மக்கும் குப்பை (Compostable) மற்றும் மக்காத குப்பை (Non Compostable) என தரம் பிரித்து குப்பைகளை உரமாக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி அலுவலகம் அருகில் வாரச்சந்தை வளாகத்தின் தென்கிழக்கு மூலையில் கட்டப்பட்டுள்ள நுண்ணுயிர் உரக் கிடங்கு மையத்தில் (Micro Compost Centre) சேகரமாகும் குப்பைகளை துகள்களாக்கும் இயந்திரம் மூலம் சிறு துகள்களாக உரமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி மேற்படி மையத்தில் நிறுவப்பட்டுள்ள இயந்திரம் பழுதடைந்து இயங்காத நிலையில் உள்ளது. மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் அலுவலகத்தில் நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில், மேற்படி மையங்களில் (Micro Compost Centre) நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள் நல்ல நிலையில் இயக்கி உரம் தயாரிக்க அறிவுறுத்தப்பட்டதால், மேற்படி இயந்திரங்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1.அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4462/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **181, நாள்.31.12.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60S9443 என்ற காம்பாப்டர் வாகனத்திற்கு 2020–2021ஆம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியத் தொகை ரூ.35818/–ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடேட் நிறுவனத்திற்கு செலுத்த அறிவுறுத்தி பட்டியல் வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. பொது சுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **182, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.த.தவசிமுத்துராஜா என்பவர் இந்நகராட்சியில் காலிப் பணியிடமாக உள்ள களப்பணி உதவியாளர் பணியிடதிற்கு பதவி உயர்வு வழங்கக்கோரி நகராட்சிக்கு எதிராக அசல் வழக்கு W.P.(MD).No.17757/2020–இல் சென்னை, தலைமைச் செயலர் அவர்களை முதல் பிரதிவாதியாகவும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை மூன்றாம் பிரதிவாதியாகவும் சேர்த்து தனக்கு களப்பணி உதவியாளர் பணியிடத்தில் பதிவு உயர்வு வழங்கக்கோரி வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களை ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கின் / வழக்கறிஞர் கட்டண செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4053/2020/சி1**

**தீர்மான எண், நாள்** **183, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பாதாள சாக்கடை திட்டம் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Grit Classifier Gear Wheel பொருத்தும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.125, நாள்.29.10.2020—இன்படி தொகை ரூ.30000/—க்கு அனுமதி பெறப்பட்டு 11.11.2020—ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எம்.வைகுண்டம், தேனி — ரூ.29930/—
2. ஸ்ரீ சரவணக்குமார் இன்ஜீனியரிங் ஒர்க், தேனி — ரூ.32480/—

**அலுவலகக் குறிப்பு:—**

1. **வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள எம்.வைகுண்டம், தேனி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3261/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **184, நாள்.31.12.2020**

**தீர்மானம்**

*******